## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

**அசல் வழக்கு எண்.61/2022**

வாக்குமூலம்..வா.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணன் | ஜாதி | |
| த/பெ. | மகாலிங்கம் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 50 / 2024 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு .17.12.2024 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் வசிக்கும் ஊர் அரசர்குளம் கீழ்பாதி கிராமம் என்றால் சரிதான். வழக்கு சொத்து இருப்பது அரசர்குளம் மேல்பாதி கிராமம் மாணிக்கம் குடியிருப்பு என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்திற்கும் நான் வசிக்கும் வீட்டிற்கும் நான்கு கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

2. தாவா சொத்தின் புல எண் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து சம்மந்தமான ஆவணங்களை நான் பார்த்தது இல்லை. வழக்கு சொத்திற்கு மேல்புறம் யார் இருக்கிறார்கள் என்பது எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கு தென்புறம் தரிசு இடம்தான். அது யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்துக்கு கீழ்புறம் தரிசு இடம் அதில் மாட்டு கொட்டாகையை இருக்கிறது. நான் ஆடு வியாபாரம் செய்கிறேன். நான் ஆடு வியாபாரம் செய்வதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

3. தாவா சொத்துக்கு தென் புறம் தரிசு என்று சொல்வது தவறு என்றாலும், அதில் ஆரிஸ்பதி மரம் பயிரிடப்பட்டது என்றால் வாதியின் இடம் தரிசாக உள்ளது. மற்ற நபரின் இடம்தான் ஆரிஸ்பதி மரம் உள்ளது. தாவா சொத்துக்கு நான்கு புறத்திலும் எனக்கு சொந்தமான சொத்துகள் எதுவும் இல்லை. பிரதிவாதிகள் பெயர்கள் எனக்கு தெரியாது. வாதி என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டியிருக்கிறார் என்றால் அவர் குடியிருக்கும் இடத்தை தவறுதலாக ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார் என்று வழக்கு போட்டியிருக்கிறார்.

4. தாவா சொத்தில் வாதி வீடு கட்டியதாக சொல்லுவது பொய் என்றாலும், பிரதிவாதிகள் தான் கொட்டகை போட்டியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. நாளது தேதிவரை வாதி தான் இருக்கிறார். நானும், வாதியும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. நான் முத்திரையர் இனத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். வாதியும் முத்திரையர் இனத்தை சார்ந்தவர் என்றால் சரியல்ல. வாதியும் என் இனத்தை சேர்ந்தவர் என்றாலும், எனக்கு உறவினர் என்றாலும், நீதிமன்றத்தில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சொத்து எங்கு இருக்கிறது என்று எனக்கு தெரியாது என்றாலும், வாதி உறவினர் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி எந்த காலத்திலும் அனுபவம் கொண்டிருந்ததில்லை என்றால் சரியல்ல. நானும், என் தந்தையும் ஆடு வியாபாரம் செய்வதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

5. வாதியின் தகப்பனார் காளிமுத்து எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை நான் 10-ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான்உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் சட்டப்படி ஏற்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.